28th March 1964]

திரு. இராம. அரங்கண்ணல்: இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் 'நஞ்சை நிலத்தில் கூட வாழைப்பழம் உற்பத்தியைச் செய்ய வேண்டும்' என்று யோசனை கூறியிருப்பதாக அறிகிறேன். அந்த யோசனையை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன்: நஞ்சையிலும் வாழைப்பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. ஹில்சிலும் வாழை மரங்களை நட்டு வாழைப் பழம் உற்பத்தி செய்யப்படுகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: வாழை மரங்கள் புயல் வரும் போது பாதிக்கப்படுகின்றன. அந்த விவசாயிகளுக்கு அரசாங்கம் மானியம் ஏதாவது கொடுக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன்: இந்தக் கேள்வி ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்வது பற்றிய கேள்வி. அங்கத்தினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

பரமன்குறிச்சி குஷ்டரோக ஆஸ்பத்திரி

* 432 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பரமன்குறிச்சி குஷ்டரோக நிவாரண ஆஸ்பத்திரியில் வியாதிஸ்தர்கள் தங்கி சிகிச்சை பெற வசதி செய்யப்பட்டிருக்கின்றதா ?

(இ) இல்லையெனில், அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

(உ) சுகமடையும் குஷ்டரோகிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நிலையமாக பரமன்குறிச்சி குஷ்டரோக ஆஸ்பத்திரியை விஸ்தரிக்க வேண்டுமென்று ராஜ்ய சுகாதார போர்டு ஆலோசனை கூறியிருக்கிறதா ?

(எ) அப்படியானால், அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இல்லை.

(இ) தற்போதுள்ள குஷ்டரோக நிவாரண துணை நிலையம், குஷ்டரோகக் கட்டுப்பாட்டு யூனிட்டாக மாற்றப்படும்போது, நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறுவதற்கான வசதிகளைச் செய்யும் விஷயம் கவனிக்கப்படும்.

(உ) ஆம்.

(எ) தங்கும் வசதி தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், பரமன்குறிச்சியில் புனர் வாழ்வு நிலையம் ஒன்றைத் திறப்பதற்கில்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : நோயாளிகளுடைய எண்ணிக்கை குறைந்திருந்தாலும் கூட சிறிய அளவிலே தோட்டம் போடுதல், சிறிய தறிகள் வைத்து வேலை செய்தல், தச்சு வேலை போன்ற வேலைகளை ஆரம்பிக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த நோயாளிகளை ரிஹாபிலிடேட் செய்ய கனம் அங்கத்தினர்கள் கூறிய தொழில்களுக்கெல்லாம் ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் உத்தேசம். ஆயினும் அந்தத் தொழில்களை ஆரம்பிக்கும்போது போதுமான அளவு நோயாளிகள் இருக்க வேண்டும். அவர்களுக்காகத் தற்போது செலவழிக்கப்படும் தொகை அதிகமாக இருப்பதால் தற்போது அந்தத் தொழில்களை ஆரம்பிப்பதற்கில்லையென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

9–00 a.m. **திரு. எம். எஸ். செல்வராஜன் :** பாபன்குறிச்சியில் ஆஸ்பத்திரி கட்டடம் முன்பே கட்டப்பட்டிருந்தாலும் கூட சமீபத்தில்தான் எல்லாவிதமான வசதிகளும் கொடுக்கப்பட்டு டாக்டர்கள், மற்ற சிப்பந்திகள் எல்லாம் போய்த் தங்கியிருக்கிறார்கள். ஆகவே அங்கு தங்கி சிகிச்சை செய்ய முன்வரக் கூடிய வியாதியஸ்தர்களுக்குள் அதிகமில்லை என்ற விவரம் அரசாங்கக் கவனத்திற்கு வந்திருக்கலாம். ஆகவே மீண்டும் புனராலோசனை செய்து அவர்கள் உத்தேசத்தைக் கேட்டு தங்கத் தயாராகயிருந்தால் இதுபோன்ற புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அங்கத்தினர் அவர்களின் ஆலோசனை கருத்தில் வைக்கப்படும்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : குஷ்ட ரோக நிலையங்களில் சென்று குஷ்டரோகிகள் சிகிச்சை பெருத நிலையில் இருப்பதால் ஒவ்வொரு ப்ளாக்கிலும் ஒவ்வொரு மொபைல் யூனிட்டை ஏற்பாடு செய்து சிகிச்சை கொடுக்க ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்போது குஷ்டரோக ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று சிகிச்சை பெறவேண்டுமென்ற அவசியம் கிடையாது. எல்லா ஆஸ்பத்திரிகளிலும் ஸ்கின் டிப்பார்ட்மெண்டில் இந்த நோயாளிகளுக்கு சிகிச்சை கொடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மொபைல் வானில் சென்று சிலவிடங்களில் சிகிச்சை செய்து வருகிறார்கள்

திரு. ம. கமலநாதன் : ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்களில் எல்லாம் ஒரு போஸ்டர் ஒட்டியிருக்கிறார்கள். குஷ்டரோகம் தொத்து வியாதி அல்ல, அதைக் குணப்படுத்த முடியும் என்றளவிற்கு நம்பிக்கை ஊட்டும் அளவிற்கு விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. வெண்குஷ்டம் தொத்து வியாதி அல்ல. அங்கங்கள் குறையும் குஷ்டநோய், தொழு நோய்; மாலை 6 மணியிலிருந்து காலை 6 மணிவரை அதன் கிருமிகள் பரவுகிறது என்று

28th March 1964]

சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிலையில் அவர்களுக்கு தனியாக ஷெட்கள் போட்டு அங்குதான் தங்கவேண்டுமென்று சொல்லப் படுவதுஉண்மையா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : லெப்ரஸி எக்ஸ்பெர்ட்ஸின் ஒப்பினியன், அது தொத்து நோய் அல்ல என்பது. க்ளோஸ் காண்டாக்ட்டில்தான் இன்ஃபெக்ஷன் வருகிறது. அவர்களை தனியாக வைத்தால் அதாவது செக்ரிகேட் செய்வதினால் அந்த நோயாளிகளுக்கு ஒருவித வெறுப்பு ஏற்பட்டு, இந்த நோய் குணம் அடையப் போவதில்லை என்ற மனப்பான்மையை ஏற்படுத்தக் கூடும். ஆஸ்பத்திரிகளில், ஸ்கின் டிப்பார்ட்மென்டில் சிகிச்சை அளிக்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது தொத்து நோயல்ல என்பது எக்ஸ்பெர்ட்ஸ் ஒப்பினியன். இந்த வியாதி ஆரம்பிக்கும்போது அவர்கள் டாக்டர்களிடம் சென்று அதுபற்றி சொல்வார்களானால் சரிப்படுத்தலாம். அப்படிச் செய்வதினால் பெர்சன்டேஜ் ஆப் க்யூர் நிறைய இருந்திருக்கிறது. வெட்கப்பட்டு சொல்லாமல் இருப்பதனால்தான் அது பரவுகிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : புனர்வாழ்வு வேலை அரசாங்க குஷ்டரோக ஆஸ்பத்திரியில் ஆரம்பிக்கப்படுகிறதா ? தனியார் ஆஸ்பத்திரியில் ஆரம்பிக்கப்பட்டால் அரசாங்க உதவி கொடுக்கப் படுகிறதா ? எந்த விகிதத்தில் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : திருக்கோவிலூரில் இருக்கிறது. 14 சப் சென்டர்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் சிகிச்சை கொடுக்கப்படுகிறது. அங்கு இயலாத சிலருக்கு ஆஸ்பத் திரிகளில் கொடுக்கப்படுகிறது.

திரு. ம. கமலநாதன் : இன்று பஸ் நிலையங்களிலும், ரெயிலடி களிலும், தெருக்களிலும் உள்ள குஷ்டரோகிகள் எல்லாம் பிச்சைக் காரர்கள் அல்ல. வசதியான குடும்பத்தைச் சார்ந்தவர்களும் இருக்கிறார்கள். வியாதியினால் வெறுப்பு ஏற்பட்டும், வீட்டிலிருந்து துரத்தி அடிக்கப்பட்டவர்களும் இருக்கிறார்கள். ஆகவே அவர் களுக்கு வாழ்க்கையில் உற்சாகம் அளிக்கும் வகையில் இந்த நோயைக் குணப்படுத்த தனியாக அவர்களை ஒரு இடத்தில் வைத்து சிகிச்சை கொடுக்க எதாவது திட்டம் இருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தூரிப்பட்ட முறையில் அந்த வியாதியஸ்தர்களுக்கு ரீஹாபிலிட்டேஷன் சென்டர்கள் ஆரம்பித்து அவர்களுக்கு சிகிச்சை கொடுப்பதற்கும், தொழிலும் கொடுத்து அவர்கள் வாழ்க்கையை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள சந்தர்ப்பம் அளிக்கவேண்டும், அதோடு மற்ற அங்க ஹீனர்களுக்கும் ஆரம்பிக்க ஒரு குழு அமைத்து அது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. சிலசமயங்களில் பஸ் ஸ்டான்ட், போன்றயிடங்களில் பிச்சை எடுக்கிறவர்கள் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களையும் கொண்டு போய் ஹோம்களில் வைத்தால் அவர்கள் அங்கு தங்குவதில்லை. அங்கிருந்து எஸ்கேப்பாகி வெளியே வந்து விடுகிறார்கள்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: தர்மபுரி தாலூகாவில் அதிகமாக ஆஸ்பத்திரிகள் இல்லை. ஆனால் அங்கு குஷ்டரோகிகள் அதிகம் இருப்பதால் அதற்காக ஒரு மொபைல் வான் ஏற்பாடு செய்து சிகிச்சை கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: முதல் உப கேள்விக்கு கவனிக்கப்படும் என்று சொன்னேன்.

திரு. ம. கமலநாதன்: தமிழ் நாட்டில் பரவலாக இந்த வியாதி உள்ளவர்கள் இருக்கிறார்களா அல்லது குறிப்பிட்ட பகுதியில் இந்த வியாதி உள்ளவர்கள் இருக்கிறார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். சவுத் ஆற்காடில் நிறைய இருக்கிறார்கள்.

திரு. எம். எஸ். மணி: குஷ்ட ரோகம் தொத்து வியாதி அல்ல என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குஷ்ட ரோகிகளுக்குப் பிறக்கிற குழந்தைகள் குஷ்டரோகமுள்ள குழந்தைகளாக இருக்கக் காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: குஷ்டரோகம் தொத்து வியாதி அல்ல என்று நான் சொல்லவில்லை. அது மெடிக்கல் எக்ஸ்பர்ட்ஸ் ஒப்பினியன் என்று சொன்னேன். பிறக்கிற குழந்தைகளுக்கு சில சமயங்களில் வந்து விடுகிறது உண்மை தான். அதற்காகத்தான் அவர்களுக்கு சிகிச்சை செய்வதோடு அரசாங்க மருத்துவர்களுக்குத் தெரிந்தால் அந்த குழந்தைகளுக்கும் உடனடி சிகிச்சை செய்கிறார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தொத்து என்றால் பலவிதமாக வருகிறது, காற்றின் மூலம் வருகிறது, தண்ணீர் மூலம் வருகிறது; தொடுவதினால் வருகிறது, ஹெரிடிட்டரியாக வருகிறது. எல்லாம் தொத்துதான். ஒவ்வொரு தொத்து ஒவ்வொரு மாதிரியாக இருக்கிறது.

திரு. எஸ். சின்னையன்: குஷ்டரோகத்தை சித்தவைத்தியம் மூலம் நிவர்த்தி செய்ய சித்த வைத்தியர்கள் தயாராகயிருக்கிறார்கள். ஆகவே சித்தவைத்தியத்தை அதற்கு அமுல் நடத்த அரசாங்கம் முன்வருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஆயுர்வேத வைத்திய சாலை வரும்போது அதெல்லாம் கவனிக்கப்படும்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: தமிழ்நாட்டில் குஷ்டரோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று அரசாங்கம் கணித்ததா? அப்படியானால் இதற்காக தனியாக ஒரு ஸ்பெஷல் ஸ்கீம் தயார் செய்து இந்த ரோகத்தை தமிழ் நாட்டிலிருந்து விரட்ட ஆலோசிக்கப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: புள்ளிவிவரங்கள் எல்லாம் அரசாங்கம் எடுத்து வைத்திருக்கிறது. அதற்காக வேண்டித்தான் அவர்களுக்கு என்னென்ன செய்யவேண்டுமோ அவற்றை செய்ய அரசாங்கம் முன்வந்திருக்கிறது.

திரு. அ. ப. அழகமுத்து : குஷ்டரோகம் சில குறிப்பிட்டயிடங்களில் மட்டும் அதிகமாக பரவுகிறது. அந்த இடத்தில் மண்ணும், தண்ணீரும் அதற்கு ஓரளவு காரணமாகயிருக்கலாம், என்று கூறப்படுகிறது. ஆகவே, அந்த இடங்களில் பரவுவதைத் தடுக்க ஏதாவது நடவடிக்கைகள் எடுக்க உத்தேசமுண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதிகமாக இருக்கிற ஏரியாவில் தனிப்பட்ட முறையில் ப்ரயாரிட்டி கொடுத்து சிகிச்சை கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. எங்கெல்லாம் ஹாஸ்பிட்டலைசேஷன் செய்யவேண்டுமோ அதைச் செய்கிறார்கள். தனிப்பட்ட முறையில் வைத்திய வசதி அளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது பரவாமல் இருக்க தடுப்பு முறையும் எடுக்கப்படுகிறது.

SRI S. NANJUNDA ROW : Will the Government be pleased to order for a detailed survey on block-war basis with regard to prevalence of leprosy in each block?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : A detailed survey has already been conducted. As a result of that, the Government are taking keen steps to completely eradicate and prevent the spreading of the disease as far as possible in the other areas.

Cement factory in Ramanathapuram district

* 433 *Q.*—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether it is a fact that a cement factory is to be started at Mandapam or Rameswaram (Ramnad district) in the Private Sector; and

(*b*) at what stage the matter stands?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government of India have granted a letter of intent to a private industrialist to set up a cement factory in Rameswaram. He is taking steps to set up the factory.

திரு. கரு. சீமைச்சாமி : இது சம்பந்தமாக இதே மன்றத்தில் கேள்வி கேட்கப்பட்டபோது விரைவில் அமைக்கப்படும் என்று கூறினார்கள். இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே இதை துரிதமாக நடத்த வேண்டிய ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இன்னும் லைசென்ஸ் கிடைக்கவில்லை. லைசென்ஸ் கிடைப்பதற்கு முன்னால் வெளிநாட்டிலிருந்து வேண்டிய இயந்திரங்கள் எல்லாம் பெறுவதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும். மற்ற எல்லா பூர்வாங்க ஏற்பாடுகளையும் செய்த பிறகுதான் லைசென்ஸ் கொடுப்பார்கள். லைசென்ஸ்